மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவினை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்."

6. சட்டமுன்வடிவுகள் —(அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(2) மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (பயனீட்டின் மீதான வரி விதிப்பு) திருத்த சட்டமுடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(ஊ) வேளாண் விளைபொருள் வாணிபம் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபம் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, இதனை பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

* **மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபம் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.